Koviloor Digital Library

மேலருங்குணம் வள்ளலார் நிலைய வெளியீடு:

உ

அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங்கருணை!!

வடலூர்

இராமலிங்க சுவாமிகள்

ஜாதகம்.

கோவிலூர் ஆதீனம்
5153
R65
கோவிலூர்-630307

அருள்ஜோதி ஆசிரமம்,
3, பாவாமுதலி தெரு,
சிதம்பரம்.

2247

Koviloor Digital Library

Koviloor Digital Library

மேலருங்குணம் வள்ளலார் நிலைய வெளியீடு :

KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE ...)

அருட்பெருஞ்ஜோதி! தனிப்பெருங்கருணை!!

வடலூர்

இராமலிங்க சுவாமிகள்

ஜாதகம்.

திசா புத்தி காண்டம்—ராகுதிசை சனிபுத்தி முதல்

" பொன்னம்பலவர் மலரடியைப் போற்றுகின்ற
இன்பன் வடலூர் இராமலிங்கன்—நன்சரிதை
எடுத்திட்டான் வீரய்யா எட்டி லிருந்தே
படித்து மகிழவென்றே பார். "

வள்ளலார் ஜாதகத்தின் மீதுள்ள அவாவினால்
பழைய ஏட்டுப்பிரதியிலிருந்து எடுத்த
மடம் குமாரசாமி ஐயரின் குமாரர்
மேலருங்குணம்
வீரய்யா (ரெயில்வே ரிடயர்ட் எம்ப்ளாயி)
அவர்களின் விருப்பத்திற்கிணங்க
அவர்களின் செலவில்

சிதம்பரம் அருள்ஜோதி ஆசிரமம்
சி. பி. மாசிலாமணி பி. ஏ. அவர்களால்

பாண்டியன் அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

காபி ரைட்] 1952. [விலை அணா 4

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

ஓம்.

அருட்பெருஞ்ஜோதி ! தனிப்பெருங்கருணை !!

சுப்பிரமணியர் அகஸ்தியருக்கு உபதேசித்த

குமாரகுரு நாடி, திசாபுத்தி காண்டம்

வடலூர்

ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள் ஜாதகம்.

ல		சனி	குரு
	இராசி மீனம்		செ கே
ரா			
		சு சந்	சூ பு

ஓம் சுப ஜென்மாதி நிகழாய் நின்ற 23-வது பரிவர்த்தி சாலிவாகன சகார்த்தன௵ 1745 கலியுகாதிகா௵ 4924 இங்கிலீஷ்௵ 1823 அக்டோபர்௴ 5உக்கு பிரபாவதிகா௵ 17-க்கு செல்லா நின்ற சுபானு௵ புரட்டாசி௴ 21உ ஆதிவாரம். பூர்வபக்ஷம். பிரதமை திதி. நா. 15. வி. 19-க்கு மேல் துதிகைதிதி. சித்திரை நக்ஷத்திரம் நா. 40. வி. 7. விஷ்கம்ப நாமயோகம் நா. 52. வி. 42. பவகரணம் நா. 15 வி. 19. இது கூடிய சுபதினம் சூரியன் உதையாதி நா. 29 வி 21. தற், 6-க்கு மீனலக்கினத்தில் சென்ற நா. 1. வி. 56. தற். 6 பாக்கி செல்ல வேண்டியது நா. 2. வி. 18. தற். 54-க்கு ஸ்ரீமத் வடலூர் இராமலிங்கசுவாமிகள் சுபஜெனனம். சுபம்.

Koviloor Digital Library

உ

வடலூர்

ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள் ஜாதகம்

சுப்பிரமணியர் அகஸ்தியருக்கு உபதேசித்தருளிய
குமாரகுரு நாடி, திசா புத்தி காண்டம்.
ராகு திசை — சனி புத்தி

சித்தாகி சிவமாகி சேயுமாகி
சிவசுடராய் சிவஞான சின்மயத்தின்
வித்தாகி விளைவாகி வேதமாகி
வேதத்தின் பொருளாகி வெளியுமாகி
சத்தாகி சடாக்ஷரத்தின் சொரூபமாகி
சண்முகனாய் சரவணத்தில் தவழ்ந்தோனாகி
முத்தாகி மூவர்க்கும் ஆசானாகி
மூலபொருள் அறிவிக்கும் முருகாபோற்றி. 1

போற்றியும் செய்திட்டுப் பொதிகைவாசன்
புகலுகிறேன் ஓர்குழவி ஜெனித்தசங்கை
தோற்றியே மனத்தில் ஜெனனமாகி
சொல்லுகிறேன் வீரியத்தில் காரிநிற்க
வீற்றியே வேதத்தில் வேந்தனாகும்
விளம்புகிறேன் பஞ்சமத்தில் சேயுங்கேதாம்
சாற்றுகிறேன் ஏழதனில் கதிரும்புந்தி
சண்முகமே சந்திரனும் சுங்கன் செட்டி. 2

செட்டியாய் உருகொண்ட வேலாபோற்றி
செப்புகிறேன் லாபத்தில் கருங்கோளாகும்
அட்டியிலா இவ்வாறாய்க் கிரகாச்சாரம்
அடைந்திட்டக் காலமதை அறைவேன்கேளும்
கெட்டியுடன் அக்காலம் சாலிவாகன்
கீர்த்தியுடன் அரசாக்ஷி ஆயிரத்தெழுநூற்று
சட்டமுடன் நாற்பத்து ஐந்துமாகும்
சண்முகமே அதுகாலம் கலியுகந்தான் 3

Koviloor Digital Library

உகமான கலியப்பா நாலாயிரத்து
    ஓதுகிறேன் தொளாயிரத்தில் இருதசமும்
யுகமாகும் அதுகாலம் சுபானுவாண்டு
    ஓதிடவே திங்களதுக் கன்னியாகும்
இகமான திகதியது இருபத்தியொன்று
    இயம்புகிறேன் கதிர்வாரம் பூர்வபக்ஷம்
சகமான துதிகையொடு சித்திரைநாள்
    சார்ந்திட்ட அத்தினத்தில் ரவிஉதையம். 4

உதையாதி கடிகையது இருபத்தொன்பான்
    ஓதுகிறேன் விகடியது இருபத்தொன்றும்
சிதையாமல் தற்பரையும் ஆறுமாகும்
    செப்புகிறேன் ஜென்மநாள் சித்திரைகடை
பதையாமல் ஜெனித்திட்டுப் பாருலகில் [பாதத்தில்
    பாரப்பா ஆதியினில் சேய்திசையில்
விதையாக இச்செனனம் செல்லுமாண்டு
    விளம்புகிறேன் வருடமது ஒன்றுமாகும் 5

ஆகுமே திங்களது இரண்டிேைடு
    அறுமுகமே நாளதுவும் இருபத்தெட்டாம்
ஏகுமே கடிகையது ஐந்திேைடு
    எடுத்துரைப்போம் விகடியது யெண்ணுன்காகும்
போகுமே தற்பரையில் ஐம்பத்தாறும்
    புகலுகிறேன் இவ்வாருய் ஜெனித்தசேய்க்கு
தோகைமயில் யேறுகின்ற முருகாகேளும்
    சொல்லிடுவாய் திசாபுத்தி காண்டந்தன்னை. 6

தன்னையுமே உரைத்திடுவாய் தணிகைவேலா
    தவமுனியும் பணிந்திட்டுப் போற்றிபோற்றி
பின்னமிலா இன்னூலை அரிகாலத்தில்
    பேசுகிறேன் நவதிசையாம் அரவமாகில்
கன்னல்மொழி வள்ளியுட நேசாகேளும்
    காரிதான் புத்தியது காணலாகும்
வின்னமிலா ராகாகுில் சனியின்காலம்
    விளம்புகிறேன் திங்களது மூன்றுபத்து 7

Koviloor Digital Library

பத்தோடு ஈரிரண்டும் தினமுமாரும்
பரிந்துரைப்பேன் இவராகூநி காலந்தன்னை
தத்துவமே உரைத்திடுமாம் விரோதிஆண்டில்
தனிகைமலை யென்குருவே மகரத்திங்கள்
முத்துபோல் திகதியது இருபத்தைந்தில்
மொழிந்திடுவேன் அதுகொண்டு பறையனாண்டி
சத்துள்ள வில்லதனில் திகதிஒன்று [ல்
சனியரசாம் யென்குருவே சாற்றக்கேளு. 8

கேளுமே காரிதான் உதையத்திற்கு
கதிர்வேலா பதினொன்றேன் விரையோனாகி
நாளுமே மூன்றதனில் நிற்கலானார்
நலமான யென்குருவே இவர்தானாக்ஷில்
ஆளுமே அன்பருக்கு பலனுமென்ன
அறைந்திடுவாய் அறுமுகமே அரனார்சேயே
கோளுமே இல்லாது குணமாய்க்கூறும்
கும்பமுனி அடிபணிந்து போற்றிபோற்றி. 9

போற்றியும் செய்துரைத்த பொதிகைவாசா
புகன்றிட்டப் பாலனுமே அடியாராகும்
தோற்றியதோர் பாலனுமே அடியார்க்கும்
தொல்லுலகோர் முக்திபெற ஞானச்சாலை
சாற்றுகிறேன் அச்சாலை இக்காலத்தில்
சான்றோர்கள் புகழ்கின்ற ஞானப்பீடம்
ஆற்றலுடன் பழுதுண்டாய் இருக்கலாகி
அகத்தியரே அறைந்திடுவேன் அன்பாய்கேளும். 10

கேளுமே யென்சீடாகும்ப நாதா
கீர்த்தியுடன் களும்பாம்பு முந்திகந்தன்
ஆளுமே அவராக்ஷிக் கடைபாதத்தில்
அகத்தியரே அஞ்ஞானம் நீங்கும்சாலை
நாளுமே அதுகொண்டு நாடோராலும்
நலமாகப் பணிசெய்ய துடங்கலுற்று
கோளுமே வந்திடுமாம் ஆதிதன்னில்
கும்பமுனி இன்னங்கள் சபைதான்தன்னை. 11

Koviloor Digital Library

தன்னை தான் பிரித்திட்டோ னொருவனுகும்
தரணியிலே கட்டுவித்தோன் ஒருவனுகும்
பின்னை தான் தூபி நீராடல்காவை
பிரியமுடன் முயற்சித்தோ னொருவனுகும்
இன்னலது அடைந்திட்டு எதிர்ப்புமாகி
இறைவனிடம் சென்றிட்டும் தடையுமாகி
நன்னலமாய் முடிந்திடுமாம் நாடோர்மெச்ச
நலமான வென்சீடா அகத்தியாரே. 12

அகத்தியரே யென்றுரைத்த அருமின்கொம்பே
அறைந்திடுவேன் ஓர்சங்கை கேளும்கேளும்
செகத்தினிலே நீருரைக்கும் வார்த்தையென்ன
செப்பிடுவாய் இதுநல்ல விந்தைவிந்தை
சகத்தினிலே சான்றோர்கள் புகழ்ந்துகூறும்
சன்மார்க்கம் துன்மார்க்க மதனைப்போக்கும்
இகத்தினிலே நாடுதனில் நல்வழியில்
இருந்தோர்க்கு கெடுதிமிக யெவ்வாறுகும். 13

எவ்வாறு மென்றுரைத்த யெந்தன்சீடா
இயம்புகிறேன் ஓர்சங்கை கேளும்கேளும்
சவ்வியமாய் சர்ச்சனராய் சத்தியத்தோராய்
சாந்தகுண முடையோராய் ஜனங்களிடையே
பவ்வியமாய் நற்குணமாய் பாரின்மீது
பலபேர்கள் மதிக்கின்ற நீதிமானேன்
ஒவ்வியே அன்னேரை நூற்றுக்கொருவன்
உணர்ந்திட்டு மதித்திடுவான் பாரின்மீது. 14

மிதமான மற்ருேர்க்குப் பகையுமாகும்
மேதினியில் இச்சங்கை யேனென்ருல்
இதமாக மற்ருேர்க்கு தத்தம்செய்கை
ஈடேற வழியில்லா தடையுண்டாகும்
மதமாக துர்நடத்தை செய்யவொட்டா
மாருட்டம் வந்திடவே மனிதரப்பா
அதமாக இவர்களுமே அரனுனையும்
அடித்துமிக கொன்றிடுவார் அவனிதன்னில் 15

Koviloor Digital Library

அவனிதனில் இன்னங்கேள் அகத்தியாரே
அக்கொடுமை தாங்காது விதியோயென்று
பவனியிலா நாட்டைவிட்ட கன்றுசென்று
பல்லோர்கள் காணாது காடுநோக்கி
மவுனமுடன் மரத்தடியில் வீற்றிட்டாலு
மவகேடு வருகின்ற வழியைக்கேளும்
கவனமுடன் கேட்டிடுவாய் யெந்தன்சீடா
கதிர்வேலும் உரைக்கின்றேன் நல்லோர்க்காக.16

ஆகமவிதி தப்பா தறைவேன்சீடா
அன்பாக ஆவாடு மேய்க்கும்பாலர்
தேக்கமிலா அம்மரத்தில் தழையொடித்தும்
தெவிட்டிடவே காய்கனியும் பறித்துத்தின்றும்
ஊக்கமிலா மனம்போக்காய் மரத்தடியில்
உவதாரியானுப் போலாடிக் கொண்டும்
சோக்கமிலா இருந்திட்டு ஆதவன்தான்
சோர்வடைந்து மேற்றிசையில் அடையுங்காலம் 17

காலத்தில் குதுகலமா யாடுமாடு
கோபாலன் தன்னைபோ லோட்டிச்செல்லும்
கோலத்தில் இப்பாலர் அம்மரத்தின்
கோகுலத்தோ னதனருகே வீற்றிட்டாலும்
சாலத்தில் புகழ்பெற்றோ ரெவரானாலும்
சான்றோர்கள் பெரியோராய் இருந்திட்டாலும்
நாலத்தில் அப்பாலர் ஒன்றிரண்டு
நாள்பார்த்து மூன்றும் நாளியம்பக்களே 18

கேளப்பா அப்பாலர் தம்மிசைக்கு
கெடுதியுட னிருந்திடவே அன்னோரெல்லாம்
கோளப்பா கொண்டுமே அவரின்மீது
குணமில்லா பகையாகி வெறியனென்றும்
நாளப்பா இவன்பித்தன் துரோகியென்றும்
நாயென்றும் பேயென்றும் வைதுகொண்டு
தேளப்பா கொட்டியதோர் விஷம்போலாக
தெளிவில்லா பாலருமே அடிக்கலாகும். 19

Koviloor Digital Library

ஆகுமே இன்னங்கேள் அகத்தியாரே
அப்பெரியார் பாலரிட இம்சைதன்னை
போகுமே தெரியாத சிறுவரென்று
பொறுத்திட்டு மனங்குளிர்ந்து மரத்தடியில்
பாகமுடன் வீற்றிடவே அன்றிரவில்
பாரப்பா பலகள்வர் களவுகொண்டு
மோகமுடன் அப்பொருளை அம்மரத்தின்
மொழிதவரு மரத்தடியில் பிரிப்போமென்று. 20

என்றுமே உரைத்திட்டு மரத்தினருகே
எல்லோரும் வந்திடவே மரத்தடியில்
அன்றுமே பெரியோரும் ஏகராக
அமர்ந்திருக்க கள்வர்க்கு ஏதுதோன்றும்
இன்றுமே இவன்பொருளும் கிட்டித்தென்று
இவர்களுமே பெரியாரை விரட்டுவார்கள்
சென்றுமே பொருள்தனையும் எங்கேவைத்தாய்
செப்பிடுவாய் மூடாயென்றுரைப் பாரப்பா. 21

அப்பாகேள் இவரிடத்தில் கள்வருக்கு
அருந்தனமும் இல்லையெனத் தெரிந்திட்டாலும்
இப்போது இவன்றனையும் விட்டுவிட்டால்
இப்பாரில் நம்விஷயம் வெளியோர்க்கு
செப்பிடுவான் அதினாலும் நமக்குத்திம்பு
ஜெகமதனில் வந்திடுமாம் இவனைத்தானும்
தப்பியே போகாது தலையைக்கொய்து
தரைதனிலே புதைத்திடுவோமென்றுரைத்து 22

உரைத்துமே துன்புறுத்தப் பெரியார்க்கு
உற்றதுணை அவ்வமயம் ஆண்டவர்தான்
நிர்த்தனமே செய்திட்டுக் கள்வரையும்
நிர்மூலம் செய்திடுவார் அனுதிரக்ஷகன்
கர்த்தனுக்கு யெவனொருவன் அடிமையாகி
கைங்கரியப் பணிசெய்ய விரும்பினாலும்
அர்த்தமுடன் ஒருசிலபேர் புகழுவார்கள்
அகிலமதில் பலபேர்கள் தூஷிப்பார்கள். 23

Koviloor Digital Library

பாரப்பா ஓர்காரியம் நேரிட்டதானால்
பலபேர்கள் ஒத்துழைத்துப் பணிசெய்வார்கள்
ஆரப்பா அகத்தியரே இதனின்சங்கை
அறைகின்றேன் உலகுதனில் மக்கள்தன்னை
சீரப்பா படைத்ததொடு காத்தழித்தல்
சிறப்பாக மும்மூர்த்திப் பணியுமாகும்
வாரப்பா வையகத்தில் ஞானச்சாலை
வளமாகப் பணிசெய்ய மூவரானார். 24

மூவரா மென்றுரைத்த முருகாகேளும்
மொழிந்திடுவேன் ஓர்சங்கை யென்குருவே
தீவிரமாய் பணிசெய்ய முயன்றுவந்த
திண்ணமுடன் அன்னவரும் யெவரோகூறும்
ஆவலுடன் அறைந்திட்டேன் அகத்தியன்முன்
அறுமுகமே அன்னோரின் சங்கைகூறும்
சேவலுடன் கொடிபிடித்த செங்கல்வராயா
செப்பிடுவாய் இதன்சங்கை யென்குருவே. 25

குருவென்று உரைத்திட்டக் கும்பமுனியே
கூறுகிறேன் அன்னோரின் விபரங்கேளும்
மருவாக மதியவரும் ஒளிமயங்கும்
மாமுனியே இப்பேராம் அமாவாசை
திருவாக அடியாரும் முன்முயற்சி
திண்ணமுடன் எடுத்திட்டாரதன் பிறகே
விருவாக சிவமதுவுங் கட்டுவித்தார்
விளம்புகிறேன் இன்னங்கேள் திருபானந்தம். 26

ஆனந்தம் கொண்டுமே தன்முயற்சியும்
அன்பாக தாபிதராடச் செய்தும்
பானந்தம் கொண்டிட்டார் ஜோதியருளை
பாரப்பா இவர்பிறப்பு ஆகஜென்மம்
தானந்தம் இச்சென்னம் பிற்ஜெனனம்
தரணிதனில் மூவரிட சங்கையெல்லாம்
மானந்த மாகவே கூறவேண்டில்
மாமுனியே இதுசமயம் அல்லஅல்ல 27

KOVILOOR ... LAYAM
... 307
KOVI... KARAIKUDI
Koviloor Digital Library

அல்லவென்று உரைத்திட்டேன் அறியவேண்டில்
அகத்தியர வள்ளலிட சங்கைதன்னில்
எல்லையினில் இம்மூவர் வளமையெல்லாம்
எடுத்துரைப்போம் அன்னூலில் அன்புகொண்டு
நல்மனதாய் மூவருமே அடியாராகும்
நலமான யென்சிடா காரியத்தில்
நில்லவனச் சிறப்புற்ற வடலூர்தன்னில்
திருநடனம் செய்திட்டார் தேவரெல்லாம். 28

தேவரொடு முனிசித்தர் முப்பொருளும்
தெவிட்டாத ஞானமுர்தம் அருந்தவேண்டி
தாவிமனம் வந்திட்டார் வடலூர்தன்னில்
தரணிதனில் மானிடரும் உய்யவேண்டி
சேவையுமே செய்திடவே காக்ஷிதந்து
ஜெகமாய்கை நீங்கிடவே அருளுமீய்ந்தார்
பாவிகளு மானாலும் வடலூர்தன்னை
பரிகசித்து சென்றாலும் அருளுமுண்டு. 29

உண்டாகும் இன்னங்கேள் வடலூர்தன்னில்
ஓதுகிறேன் ராகாக்ஷில் காரிபுத்தில்
கண்டுமே உரைத்திடுவேன் புதுமையாக
காணப்பாயந் திரமும் ஒளிபெற்றோங்கும்
தொண்டுபல செய்திடுவார் அயல்தேயத்தோர்
சொல்லுகிறேன் கட்டடமும் குண்டமுண்டு
பண்டுபொருள் தன்னைக்கொடுத்துப் பலம்பரப்பா
பலபலவாய்ப் பணிசெய்து புகழுலாகும். 30

ஆகுமென்று உரைத்திட்டேன் அகத்தியரே
அறைகின்றேன் இன்னங்கேள் தேவரெல்லாம்
மோகமுடன் தினந்தினமும் வடலூர்தன்னை
ஒருமனதாய் வந்திட்டு சேவைசெய்து
போகிடுவார் இக்காக்ஷி நல்லோர்க்கெய்தும்
புண்ணியவானு னுக்கால் பார்க்கலாகும்
தோகைமயில் ஏறுகின்ற சுப்பிரமணியம்
சொல்லியதோர் சூக்ஷுமிது இன்னங்கேளும் 31

Koviloor Digital Library

சொல்லியதோர் இச்சங்கை உலகோர்காண
　　சோதித்து விளம்பரமு மாகலாகும்
எல்லையில் நல்லவனும் அன்பனாகும்
　　இன்பமுடன் இச்சங்கை எடுத்துரைக்க
வில்லுடைய மால்மருகன் அருளினாலே
　　வெளிப்படுத்த வந்திடுவான் அக்காலத்தில்
நல்லவராம் பெரியோரும் புகழ்வாராகும்
　　நலமான யென்சீடா காரிகாலம். 32

காலத்தில் விளம்பரமும் ஆகுமென்றாய்
　　கதிர்வேலா யென்குருவே போற்றிபோற்றி
ஞாலத்தில் இச்சங்கை உலகுதன்னில்
　　நலமாக விளம்பரமும் யெவர்தானப்பா
கோலமுடன் உலகிற்கு அறிக்கைசெய்து
　　குணமாக அருள்ஜோதி அருளும்பெற்று
ஆலமுடன் அஞ்ஞானம் சுட்டறுக்கும்
　　அன்பனையும் உரைத்திடுவாய் அறுமுகமே 33

அறுமுகமாய் ஒருமுகமாய் விளங்கும்நாதன்
　　அறைகின்றேன் அகத்தியரே அன்பனையும்
திருமுகமாய் விளங்கிடுவான் வீரசைவன்
　　செப்புகிறேன் வீரய்யன் பேருமாகும்
ஒருமுகமாய் வள்ளலுக்கு அடிமையாகும்
　　ஓதுகிறேன் அன்னவனும் இதற்குமுன்னும்
பெருமுகமாய் வள்ளலார் சங்கைதன்னை
　　பேணியே உலகிற்குச் சுருக்கமாக. 34

ஆகமவிதி தப்பா தறிவித்தாராம்
　　அகத்தியரே அதன்பின்னும் பலநூல்பார்த்து
மோகமுடன் சரித்திரமும் பார்த்துப்பார்த்து
　　மொழிதவறு அன்றாலே வெளிப்படுத்த
தாகமுடன் பலநாளும் மனமுவந்து
　　தாற்பரியம் அடைந்திட்டும் பயனுமில்லா
சோகமுடன் இருந்திடுவான் மதிமயங்கி
　　சொல்லுகிறேன் இன்னங்கேள் அகத்தியரே. 35

Koviloor Digital Library

அகத்தியரே இன்னூலை வெளிப்படுத்த
அன்பாகப் பலரிடத்தில் உரைத்துக்கொள்ள
செகத்தினிலே சிறிதுபேர் தவக்குறைவால்
செப்பிடுவார் இதுவெல்லாம் வீணேயென்று
இகத்தினிலே முன்னிடுக்கம் பின்னிவர்த்தி
இயம்புகிறேன் அன்பனின் சங்கைதன்னை
சகத்தினிலே பின்னுரைப்போம் அன்புகொண்டு
சாற்றியதோர் இதுபலனும் முற்றுமாகும். 36

ஆகமவிதி தப்பா அகத்தியாரே
அறைந்திடுவேன் தூபி நீராடல்காலம்
சோகமாய் உதையாதித்த சமமானோர்
சொல்லுகிறேன் அக்காலம் கோசரத்தில்
பாகமாய் கும்பத்தில் மறைந்துநிற்க
பகருகிறேன் வேந்தனையும் சனியும்பார்க்க
மோகமாய் உள்ளூராம் வடலூர்தன்னில்
மொழிந்திடுவேன் சிறிதுபேர் கலகமாகி 37

கலகமதாய் தன்னோடு அயலூர்தன்னில்
காரியமாய் தன்னினமே சேர்த்துக்கொண்டு
கோலமதாய்க் கலவரமும் செய்வா ரப்பா
கும்பமுனி யென்சீடா இவைக ளெல்லாம்
நலமாக ராசியினில் குருவு மப்பா
நல்கேந்திரம் பெற்றிட்டு குருவை நோக்க
பெலமாகப் பெரியோரால் இறைவர் தன்னால்
பெற்றதொரு கலவரமும் நீங்க லாச்சு. 38

ஆச்சுதப்பா இதுவெல்லாம் வள்ளல் செய்கை
அறைகின்றேன் அதுகாலம் உலகு தன்னில்
வீச்சுதப்பா அருள்சோதி பிரகா சந்தான்
விளம்புகிறேன் உலகுதனில் இதுவ ரைக்கும்
வாச்சுதப்பா எவ்வளவோ மகிமை காண
வையகத்தி லிதுபோலும் மனித ரப்பா
சாச்சுதமாய் கூட்டமதைக் காண மாட்டார்
சாற்றுகிறேன் இன்னங்கேள் அகத்தி யாரே. 3

Koviloor Digital Library

அகத்தியரே தூபிநீ ராடல் கண்டு
அருள்ஜோதி தெரிசனமும் அடைய வேண்டி
செகத்தினிலே கோடானு கோடி மக்கள்
செப்புகிறேன் வடலூரின் தெரிச னத்தை
நகத்தினிலே சதையதுவும் ஒட்டி னுப்போல்
நலமாக அடைந்திட்டார் நாடோ ரெல்லாம்
சகத்தினிலே இம்மகிமை யெவ்விடத்தும்
சாற்றிடவே நாவேது கண்டோ ரில்லை. 40

இல்லையென்று உரைத்திட்டேன் இன்ன மொன்று
இயம்புகிறேன் மனிதர்க்கு தவிப்பு மற்ற
எல்லையினில் காரிதான் யெவரை விட்டார்
எவ்வுலகும் எவ்விடத்தும் எதிரி இல்லை
தில்லைவன மென்றுரைக்கும் வடலூர் தன்னில்
திண்ணமுடன் தூபிநீ ராடுங் காலம்
அல்லனுடன் சனியவரும் கோசா ரத்தில்
அருக்கனிட வீடேறி கும்ப குருவை 41

குருவையுமே பார்த்திட்டார் சனிதா னப்பா
கும்பத்தோன் சனியாகி விடையி லாதி
பெருவாக மூன்றிடமாம் போஜ னத்தில்
பெற்றிட்டும் அந்தணரைப் பார்த்த தாலும்
தருவாக காரிதான் நின்றத்தா னேன்
தரணிதனில் மழைக்கோளாய் அஷ்ட மத்தில்
மருவாக மறைந்திடவுங் கும்பா கேளும்
மக்கட்கு வடலூரில் வறுமை யுண்டு. 42

உண்டாகு மென்றுரைத்த யென் குருவே
ஓதுகிறேன் ஓர்சங்கை கேளும் கேளும்
தொண்டருக்குத் தொண்டனாய் தோன்றி வந்த
தோடுடைய செவியோனின் ஸ்ரீசயா போற்றி
கண்டுமே உரைத்திடுவேன் காரி தானும்
காணப்பா விடையிலுற அத்தா னத்தோன்
செண்டுபோல் அஷ்டமத்தில் சேர்ந்திட் டாலும்
செங்கதிரோன் ஒளிவாங்கும் மதியி னேடு. 43

Koviloor Digital Library

மதியோடு சேர்ந்திட்டு ஆகூஷி யாக
மால்மருகா இன்னங்கேள் குருவும் நோக்க
விதியாகப் பத்திடத்தை வேந்த னப்பா
விளம்புகிறேன் பார்த்திடவும் மக்க ளுக்கு
கெதியாக வறுமையுற யெவ்வா ருகும்
கெவுனத்தில் புகழ்கொண்ட கௌரி சேயே
சதியாக கொடுமையது யேது யேது
சாற்றிடுவாய் இச்சங்கை சண்முகமே: 44

சண்முகமே யென்றுரைத்த அகத்தி யாரே
சாற்றுகிறேன் அரக்கனையும் பத்தி டத்தை
கண்முகமாய் குருபார்க்க அரக்க னுக்கு
காணப்பா பகையோராம் குருவு மாகும்
தண்முகமாய் குருவுமே புதனூர் வீட்டில்
தனித்திருக்கப் புதனூர்க்கும் அந்த ணர்க்கும்
நன்முகமே இல்லாத பகையு மாகும்
நலமில்லாப் பகையாளி வீட்டில் நின்று. 45

நின்றுமே நோக்கிடவே பலித மில்லை
நிகழ்த்துகிறேன் பத்தாதி கோச ரத்தில்
அன்றுமே கும்பத்தில் மறைந்து போக
அகத்தியரே சனிபார்க்கப் போஜ னந்தான்
மன்ருடி யடைந்திட்டும் சுகமில் லாமல்
மறைந்திட்டும் பாழாகி வீணே யாச்சு
சென்றேடிப் பார்த்திடவும் திகைப்புண் டாச்சு
செப்புகிறேன் இன்னங்கேள் பரத விப்பு. 46

தவிப்பாக இன்னமொரு சங்கை கேளு
தவமுனியே அரக்கனுமே யாக்ஷி யாக
கவிப்பாக ஐந்தாதி மதியுங் கூட
காணப்பா அரக்கனிட பல மதனை
ஜெயிப்பாக மதிபெற்றூர் மதி மறைய
செப்புகிறேன் வெள்ளியுமே மழைக்கோ ளாகும்
அவிப்பாக மறைந்திடவும் ஜலமு மங்கே
அகத்தியரே வறண்டிடுமாம் ஜலமு மில்லை. 47

Koviloor Digital Library

ஜலமில்லா மக்கட்கு கஷ்ட மெத்த
சாற்றுகிறேன் மக்களிட தவப லத்தால்
கலகமிலா ஜலமுடனே போஜ னந்தான்
கண்டிட்டார் சிறுபே ரென்ன லாகும்
உலகுதனில் இவ்வாறாய் முடிந்த நீராம்
ஓதுகிறேன் இன்னங்கேள் காரி புத்தில்
பலமாகக் கோசாரம் குருதா னப்பா
பகருகிறேன் மீனத்தில் வாழுங் காலம் 48

காலத்தில் ஓர்புதுமை உண்டு உண்டு
கலைமுனியே உரைக்கின்றேன் கேளும் கேளும்
கோலத்தில் மாளிட ரூபங் கொண்ட
குணமான வள்ளலிட வடலூர் தன்னில்
நாலத்தில் உலகாளும் அரசர் தன்றல்
நலமாக குளங்கேணி வெட்டுவித்து
ஆலத்தில் புகழ்பெற்ற வண்மை கேளும்
அகிலமதில் அருள்ஜோதி தீர்த்த மாகும். 49

ஆகம விதிதப்பா தறைந்தேன் சீடா
அத்தீர்த்தம் ஜோதியருள் தீர்த்த மாகும்
பாகமுடன் மகிமையது மெத்த வுண்டு
பாரப்பா மடாலயம் அன்னசத் திரம்
மோகமுடன் கட்டுவிப்பார் மொழி தவறார்
முனியேகேள் இக்காலம் ஓர் கொடுமை
சோகமுடன் வந்திட்டு நீங்கும் நீங்கும்
சொல்லுகிறே னிதன்சங்கை கேளும் கும்பா. 50

கும்பாயென் றுரைத்திட்ட யென் குருவே
கோபாலன் மால்மருகா கேளும் கேளும்
அம்புவியில் நீருரைத்த வார்த்தை நன்று
அரசருமே செய்திடவும் கொடுமை யென்ன
பம்பரம்போ லாட்டுவிக்கும் இறைவ ரப்பா
பாருலகில் யெவ்விதியு மியற்ற லாகும்
சம்பரமாய்ப் பணிசெய்யில் கலக யென்ன
சாற்றிடுவாய் இதன்சங்கை யென் குருவே. 51

Koviloor Digital Library

குருவென்று உரைத்திட்ட கும்பா கேளும்
கூறுகிறேன் கொடுமைதனை விபர மாக
தருவாக மீனத்தில் குருதா னுக்ஷி
தரணிதனில் அக்காலம் சனியு மப்பா
பெருவாக கன்னியினில் வாச மாகி
பெரியோராம் அந்தணரைப் பார்க்க லானூர்
மருவாகப் பார்த்திடவே இதனின் சங்கை
மாமுனியே உரைக்கின்றேன் கேளும் கேளும் 52

கேளுமே தாபின ராடல் போது
கெடுதிமிக செய்திடவே யெண்ணங் கொண்ட
நாளுமே அன்னோரில் சிறிது பேரும்
நலமாக இன்னுமொரு சிறிது பேரும்
ஆளுமே அரசரிடம் கலக மாகி
அழிந்திடுவார் அன்னோரும் மறைய லாகும்
தேளுமே கொட்டியதோர் வேகம் போலும்
தெவிட்டாமல் பணியதுவு முடிய லாகும். 53

ஆகம விதிதப்பா அயலா ராலும்
அருள்ஜோதி வழிகாணப் பணிசெய் வார்கள்
பாகமுடன் பூவாத மலரின் வாசம்
பரிகசிக்கும் மலர்ந்திடவே நாளு முண்டு
போகமுடன் யென்னுளும் அருளு முண்டு
பூவுலகக் கைலாயம் யென்ன லாகும்
மோகமுடன் உரைத்திட்டக் காரி புத்தில்
மொழிந்திட்ட இதுபலனும் முற்று மாகும். 54

ராகுதிசை புதன்புக்தி 2 வருஷம் 6 மாதம் 18 நாள்

முற்றுமாய் ராகுவில் காரி புத்தி
மொழிந்திட்ட யென்குருவே குமர வேளா
பற்றுமே அடைந்திட்டு அறுமு கமே
பாரளந்தோன் பலனதுவும் கூறும் கூறும்
பெற்றுமே ராகுவில் புந்தி காலம்
பெருமானே திங்களது முத்த சமும்
சற்றுமே நாளதுவும் பதினெட் டாகும்
சண்முகமே இவராக்ஷி காலம் கேளும். 55

Koviloor Digital Library

கேளுமே யென்குருவே நந்த ளுண்டு
 கீர்த்தியுள்ள தனூர்திங்கள் திகதி யொன்று
நாளுமே அடைந்திட்டுக் காம ளுண்டில்
 நலமான மிதுனமாம் திங்கள் தன்னில்
ஆளுமே பத்தொன்பான் திகதி மட்டும்
 அச்சுதனார் ஆக்ஷியது புரிய லாகும்
கோளுமே இல்லாது குமர குருவே
 குவலயத்தோர் புகழ்ந்திடவே பலனைக் கூறும் 56

கூறுமே யென்குருவே குமர வேளா
 கோபாலன் சுகசப்தோ னுகிக் கேந்திரம்
பாருமே ஏழுதனில் உச்ச மானுர்
 பரப்பிரம சொரூபமே யென் குருவே
சேருமே ஆரேனும் அருக்க னப்பா
 செங்கதிரும் சேர்ந்திட்டு ஜென்மந் தன்னை
வாருமே இருவரும் நோக்க லானுர்
 வழுத்திடுவாய் இதுகாலம் பலனு மப்பா. 57

அப்பாகேள் யென்சீடா அகத்தி யாரே
 அச்சுதனார் ஆக்ஷியினில் அன்பா கேளும்
செப்புகிறேன் வள்ளலுக்கு ஜெக மதனில்
 சித்திக மாகிட்டு வடலூர் தன்னில்
இப்பாரில் காணுத ஞானச் சாலை
 இயற்றிடுவார் அடியார்கள் அன்பு கொண்டு
தப்பிதமே இல்லாமல் அன்ன சத்திரம்
 தானுண்டாய் தருமங்கள் மிகவுண் டாகும். 58

உண்டாகும் வள்ளலிட பெருமை தன்னை
 உலகோர்கள் அறிந்திடவே பறையும் சாற்ற
தொண்டர்களும் அடைந்திட்டு உலகு தன்னில்
 தோன்றியதோர் வள்ளலிட சங்கை தன்னை
கண்டுமே அறிந்திடவே உபதே சிப்பார்
 காசினியில் சமரச சன்மார்க் கத்தை
கொண்டுமே விளக்கிடுவார் உலகு தன்னில்
 குவலயத்தில் மாந்தர்களும் உய்ய வேண்டி. 59

Koviloor Digital Library

வேண்டியே அகத்தியரும் ஒன்று கேட்பேன்
வேலவரே யென்குருவே போற்றி போற்றி
ஆண்டவரே யென்குருவே அறு முகமே
அச்சுதனர் ஆக்ஷியினில் ஞானச் சாலை
பாண்டவர்க்குத் தூதுசென்ருன் மருகா கேளும்
பரிவாக இயற்றிட்டுப் பாரு லகில்
தாண்டவம் புரிந்திடும் சமரசம்
தானுரைத்திர் யென்குருவே கேளும் கேளும் 60

கேளுமே அச்சுதனர் கேந்திர முச்சம்
கீர்த்தியதை அழித்திடவே செங் கதிரோன்
கோளுமே புரிகின்ற சத்துரு வாகி
கோபாலன் தன்னிடத்தில் கூடி டவே
ஆளுமே அச்சுதனர் புத்தி காலம்
அறைந்திட்ட பலனுக்கு இடுக்க முண்டு
நாளுமே இதுசங்கை விபரங்கூறும்
நடனமயில் மீதேறுங் கந்தா போற்றி. 61

போற்றியும் செய்துரைத்த பொதிகை வாசா
புகலுகிறேன் இதுசங்கை கேளும் கேளும்
நாற்றிசையும் ஒளிகொடுக்கும் கதிரு மப்பா
நலமான மாலுக்கு சமமே யாகும்
தோற்றியதோர் ஜென்மத்திற் காரோ ஞகும்
சொல்லுகிறேன் ஆருேனும் சத்துரு வாகி
சாற்றுகிறேன் இதுசங்கை கும்ப நாதா
சாந்தமுடன் அறிந்திடுவாய் அகத்தி யாரே. 62

அகத்தியரே அச்சுதனர் ஆக்ஷி காலம்
அறைந்திட்ட சாலையது இயற்றும் போது
செகத்தினிலே தொண்டர்க்குள் பகையுண் டாகி
செப்புகிறேன் அதுகலகம் நிவர்த்தி யாகும்
நகத்தினிலே சதையதுவும் ஒட்டினுப் போல்
நலமாகப் பற்றுண்டாய் விர்த்தி யாகும்
இகத்தினிலே இன்னமொரு சங்கை கேளும்
இயம்புகிறேன் யென்சீடா கும்ப நாதா. 63

Koviloor Digital Library

கும்பத்தில் உதித்திட்ட முனியே கேளும்
குமரகுரு உரைக்கின்றேன் வள்ள லாரும்
அம்புவியில் திங்களது [1] மகரம் பூச [2] உடு
அந்தியில் அருட்பெருஞ் சோதிஆண் டவரும்
நம்பியே வந்திடும் அடியார்க்கு
நலமாக தரிசனமும் ஆவா ரப்பா
செம்பினில் புளியிட்ட வாறு போலும்
செகமதனில் களங்கற்ற நல்லோர்க் காகும். 64

ஆகுமே அடியார்க்கும் அன்பர்க்கும்
ஆண்டவராம் சொரூபத்தை காட்டு வாராம்
போகுமே பொல்லார்க்கு மறைவ தாகும்
புவனத்தில் வந்திட்டுப் பூச நாளில்
ஏகுமே கடிகையது மூன்றே முக்கால்
இயற்கையுரு காண்பித்து மறைப்பா ரப்பா
தோகைமயில் ஏறுகின்ற சுப்பிர மண்ணியம்
சொல்லியதோர் வாக்கதுவும் தப்பாதப்பா. 65

தப்பாது என்றுரைத்தேன் தணிகை வேலன்
தவமுனியே இன்னங்கேள் அடியார் சங்கை
இப்பாரில் வடநாட்டில் புகழுண் டாகும்
இயம்புகிறேன் இமயமலை யெல்லை மட்டும்
ஒப்பிடவே வள்ளலுக்கு அரச ரப்பா
ஓதுகிறேன் அடியாராய் தொண்டு செய்து
செப்புகிறேன் வடலூரில் கேணி யொன்று
செகம்புகழ யெடுத்திடவே முயற்சி யுண்டு. 66

உண்டாகும் இன்னங்கேள் கூறு கின்றேன்
உலகோர்கள் வடலூரை அடைய வேண்டி
கண்டுமே புகழ்ந்திடவே காசி வரியோர்
கலைமுனியே சாலைமிக இயற்ற வேண்டி
அண்டியே வந்திட்ட அடியா ரோடும்
அரசருமே யோசித்து முயற்சி எடுப்பார்
வண்டுமே வனத்தினிட புஷ்பந் தன்னில்
வகையாக மதுவதனை உண்ணு மாப்போல். 67

---

1 மகரம்—(நந்தன) தை 16. 2 உடு—நக்ஷத்திரம்.

Koviloor Digital Library

உண்ணுகின்ற வகைபோலும் வள்ளல் மதுவை
உலகோர்கள் சிறிதுபேர் உண்ணுவார்கள்
விண்ணுலகம் மண்ணுலகம் புகழும் வள்ளல்
வேதாந்தம் வெளிநாட்டில் புகழுண் டாகும்
கண்ணனெனும் மால்மருகன் கந்தன் வாக்கு
கலைமுனியே இதுமட்டும் புந்தி யாகூஷில்
திண்ணமுடன் உரைத்திட்டேன் யென்தன் சீடா [68
தென்மயிலோன் உரைத்திட்டேன் இதுவும்முற்றே.

ராகுதிசை கேதுபுத்தி ஸ்ரீ 1 மீ 0 நாள் 18

முற்றுமாய் ராகுவில் புந்தி யாகூஷி
மொழிந்திட்ட யென்குருவே கந்தா போற்றி
பற்றுமே அடைந்திட்டு முனியு மப்பா
பகருகிறேன் இன்னங்கேள் யென் குருவே
நற்றவமே புரிந்திட்ட வள்ள லார்க்கு
நலமான ராகாகூஷில் சிகியின் புத்தி
பெற்றதோர் ஆண்டதுவும் ஒன்று மாகும்
பெருமானே நாளதுவும் பதினெட் டாகும். 69
ஆகுமே இவராகூஷி கால மப்பா
அறைகின்றேன் மன்மதனுர் ஆண்டு ஆனி
ஏகுமே பத்தொன்பான் திகதி கொண்டு
இயம்புகிறேன் துன்முகி ஆடித் திங்கள்
போகுமே திகதியது ஏழு மட்டும்
புவனத்தில் கருங்கோளில் சிகியின் காலம்
பாகுமொழி வள்ளியுட நேசா கேளும்
பரிந்துரைப்பேன் பஞ்சமத்தில் சிகியும்சேயும். 70
சேயுடனே அமர்ந்திட்டு சனியும் நோக்க
செப்பிடுவாய் இக்காலம் வள்ள லார்க்கு
தேயத்தில் பலனென்ன கூறும் கூறும்
செங்கதிரோன் ஒளிமழுங்கும் வேல் பிடித்த
மாயவனின் மருகோனே யென் குருவே
மாநிலத்தோர் அறிந்திடவேகூறும் கூறும்
சாயா புருஷனுய் வந் துதித்த
சண்முகமே யென்குருவே போற்றி போற்றி. 71

Koviloor Digital Library

போற்றியும் செய்துரைத்த பொதிகை வாசா
புகலுகிறேன் யென்சீடா அகத்தி யாரே
சாற்றுகிறேன் சிறிபுத்தியில் வள்ள லார்க்கு
சண்முகமும் உரைக்கின்றேன் கேளும் கேளும்
வீற்றியே வடலூரில் ஞான ஜோதி
விளங்கிட்டுப் பிரகாசம் தோன்றும் தோன்றும்
ஆற்றலுடன் வடலூரும் ஜோதி மயமாய் [ரப்பா.72
அடைந்திட்டு தேவரொடு முனிசித்தர் புகழ்வா-

அப்பாகேள் வடலூரின் தென் திசையில்
அடியார்கள் தோன்றிட்டு அன்னோர் தன்னால்
இப்பாரில் வள்ளலுக்கு பூமி சேர்க்கை
இன்பமுடன் அளித்திட்டு அன்ன தானம்
செப்புகிறேன் அடியார்க்குச் செய்வா ராகும்
செகமதனில் இன்னமொரு சங்கை கேளும்
ஒப்பிடவே உலகதனில் ஜோதி யொன்று
உலகோர்கள் அதிசயிக்க தோன்ற லாகும். 73

ஆகுமே பிராஞ்சுநகர் அதனி லப்பா
அடியாரும் தோன்றிட்டு வடலூர் தன்னில்
ஏகுமே தொண்டுமிக செய் திடுவார்
இயம்புகிறேன் தென்மேற்கு திக்கி லப்பா
போகுமே சிறிதுபேர் தோன்றலாகி
புவனத்தில் வள்ளலுக்குத் தொண்டு செய்து
மோகமுடன் பூமிபல சேர்க்கை செய்தும்
மொழிந்திடுவார் பலதேயம் வள்ளல் சங்கை. 74

சங்கைதனை உரைத்திடுவாய் என் றுரைத்த
சண்முகமே யென்குருவே கேளும் கேளும்
இங்ஙனமே உரைத்திட்ட சங்கை யென்ன
இயம்பியதோர் பலனென்ன கூறும் கூறும்
பொங்குமனம் அடைந்திட்ட புவனி பாலா
புகலுகிறேன் சேய்கிகியை சனியும் பார்க்க
எங்ஙனம் நீருரைத்த பலனு மென்ன
ஈடேற வழியுண்டோ இடுக்க முண்டு. 75

Koviloor Digital Library

உண்டாகு மென்றுரைத்த யெந்தன் சீடா
ஓதுகிறேன் சனியப்பா லாப விரையோன்
பண்டுடனே மூன்றதனில் மறைவ தாகி
பார்த்திடவே கலகமது ஓடு மப்பா
விண்டுமே சேய்சிகிக்கு சனிலா பத்தில்
வீற்றிருக்க அன்னோரால் லாப முண்டு
கண்டுமே உரைத்திட்டேன் இன்னங் கேளும்
காசினியில் வள்ளலிட மகிமை தன்னை. 76

தன்னைத்தான் அறிந்திடவே பலதே யத்தில்
தனதாக அடியாரும் பறையும் சாற்றி
தென்னாடு வடநாடு மண்ணுலகம்
திக்கெல்லாம் ஞானகுரு ஜோதி தோன்றும்
நன்னலமாய் ஞானங்கள் தோற்ற மாகும்
நலமான நாடதுவும் ஞான நாடாய்
இன்னிலத்தில் புகழுண்டாம் அடி யார்க்கு
இயம்புகிறேன் அடியாரால் தனமும்சேர்க்கை 77

சேர்க்கையது செய்திட்டு ஞானக் கல்வி
க்ஷேத்திரமாம் சாலையது இயற்று வார்கள்
பார்க்கக்கண் கூசிடுமாய் சாலை யப்பா
பரப்பிர்ம்ம ஜோதியுரு ஞானச் சாலை
மார்க்கமுடன் அடைந்திட்டுப் பல்லோ ரப்பா
மாயைதனை வேரறுத்து ஞானக் கல்வி
ஆர்க்கமுடன் பயின்றிடுவார் அகத்தி யாரே
அறைந்திட்ட இப்பலனும் இன்னங் கேளும் 78

கேளுமே இக்காலம் கோசா ரத்தில்
கீர்த்தியுள்ள என்சீடா அகத்தி யாரே
கோளுமே செய்கின்ற மந்த னப்பா
குணமாக ஏழரை நாட்டோ ளகை
நாளுமே கோசாரம் ஜென்மச் சனியாய்
நலமாக இருந்திடவே அதுகா லத்தில்
மாளுமே இக்காலம் வடலூர் தன்னில்
மாருட்டம் ஒன்றுண்டு சீடா கேளும் 79

Koviloor Digital Library

சீடனே கும்பத்தில் பிறந்த பாலா
செப்புகிறேன் மந்தனும் கோ ளதனில்
நாடியே மதிசுங்கன் மகிழ்ந்து கூட
நலமான மதிசுங்கன் பெண்கோ ளாகும்
தேடியே ஓர்மாது வடலூர் தன்னில்
தீவிரமாய் ஜோதியினை அடைய வேண்டி
பாடியே வடலூரை அடைந்து கொண்டு
பாராளும் அரசர்போல் மாளி கட்டி 80

கட்டிடுவாள் வடநாட்டோன் பொருளுங் கொண்டு
கலைகள்மிக அறிந்திட்டு ஞானங் கொண்டு
அட்டியிலா தொண்டுபல செய்து கொண்டு
அரிதேசி பரதேசி அடி யார்க்கும்
கெட்டியுடன் தானங்கள் மிகவும் செய்து
கீர்த்தியுடன் இருந்திடுவாள் செயலைக் கேளும்
திட்டமுடன் இருக்கின்ற கன்னி கைக்கு
திண்ணமுடன் ஏழரைநாட் டானு மப்பா 81

அப்பாகேள் கோலதனில் மந்தன் சென்று
அம்மாதை படுத்துகின்ற செயலைக் கேளும்
இப்பாரில் கன்னிகையும் போலி வேடம்
இயற்றிட்டுப் பலபேரின் பொருளும் சேர்த்து
செப்புகிறேன் தருமங்கள் செய்யா வண்ணம்
செகத்தோரை மயக்கிட்டு சோரம் செய்து
தப்பிதமே செய்கின்றாள் என்று சிலபேர்
தாற்பரியம்அடைந்திடுவார் வடலூர்தன்னில் .82

தன்னைத்தான் அறிந்திட்ட அகத்தி யாரே
தவமுனியே யென்சீடா வடலூ ருக்கு
பின்னைதான் மேல்திக்கில் சிறிது பேரால்
பேச்சியது உண்டாகி கலகம் செய்து
நன்னலமாய் வருகின்ற ஞானச் சாலை
நலமாக அடியாரைச் சேர்த்துக் கொண்டும்
கன்னல்மொழி நங்கையினை அடையுஞ் சாலை
காசினியில் பலதுராய்ப் பகர லாகும். 83

Koviloor Digital Library

ஆகுமென்று உரைத்திட்ட அறு முகமே
அறையுகின்றேன் ஓர்சங்கை கேளும் கேளும்
பாகுமொழி நங்கையரால் அடி யார்க்கும்
பாரதனில் கீர்த்தியது மங்க லாகி
மோகமுடன் நங்கையினை அடைந்தாரென்று
மொழிந்திட்ட வாக்கதுவும் என்ன வாகும்
சோகமுடன் வடலூரின் மகிமை யப்பா
சோர்வடைந்து குறைந்திடுமோ கூறும்கூறும். 84

கூறுகிறேன் யென்சீடா அகத்தி யாரே
குவலயத்தில் பலபேரால் இடுக்க முண்டு
பாருமே பரமகுரு சனியை நோக்க
பரப்பிரம்ம ஜோதியி னருளால் மைந்தா
நேருமே வடதிக்கு ஈசான்யந் தான்
நெறியாக இத்திக்கின் அடியாராலும்
தூருமே செய்கின்ற கயவர் தன்னை
துலகாளும் அரசரால் நிவர்த்தி யுண்டு. 85

உண்டாகி தருமங்கள் விருத்தி யாகும்
ஓதுகிறேன் ஞானகுரு தோற்றமாகும்
பண்டுடனே பொன்பொருளும் பூமி சேர்க்கை
பாருலகில் ஈந்திடுவார் வள்ளற் காக
அண்டமதில் ஞானங்கள் விர்த்தி யாகி
அருட்பிர காசவள்ளல் ஆண்ட வர்தான்
கொண்டதொரு நல்வழியை பற்றிச் செல்வார்
குணமான சிகிபலனும் இதுதான் முற்றே. 86

ராகு திசையில் சுக்கிரபுத்தி வரு 3.

முற்றுமாய் ராகுவில் சிகியின் புத்தி
மொழிந்திட்ட யென்குருவே குமர வேலா
பற்றுமாய் ராகுவில் சுங்க ஞக்ஷி
பாரப்பா வருடமது மூன்று மாகும்
சற்றுமே இவராக்ஷி ஆண்டு கேளும்
சண்முகமே துன்முகி ஆடித் திங்கள்
பெற்றுமே திகதியது ஏழு கொண்டு
பெருமானே இவராக்ஷி முடிவு கேளும். 87

Koviloor Digital Library

கேளுமே யென்குருவே தணிகை வேலா
கீர்த்தியுள்ள ஆண்டதுவும் விகாரி யாகும்
நாளுமே திங்களது கடக மாகும்
நலயாகத் திகதியது ஏழு மட்டும்
ஆளுமே ராகுவில் சுங்க னப்பா
அதிகாரம் புரிந்திட்டு அறு முகமே
கோளுமே அமைந்திட்ட அட்ட மத்தில்
குமுதபதி அரக்கனும் சகித மாக. 88

ஆகம விதிதப்பா அரசன் நோக்கம்
அறைகின்றேன் இன்னங்கேள் சேயும் நோக்க
நாகமதை ஆபரணம் பூண்டோன் சேயா
நவின்றிடுவாய் இதுகாலம் வள்ள லார்க்கு
பாகமுடன் அளிக்கின்ற பலனு மென்ன
பரிந்துரையும் யென்குருவே கந்தா போற்றி
தோகைமயில் ஏறுகின்ற வேலா போற்றி
தோடுடைய செவியோனின் மைந்தாபோற்றி.89

போற்றியும் செய்துரைத்த பொதிகை வாசா
புகலுகிறேன் ராகுவில் சுங்க னுகூவில்
நாற்றிசையும் புகழ்படைக்கும் யெந்தன் சீடா
நலமாக சுங்கனும் மூன்றுக் கெட்டோன்
வீற்றியே அஷ்டமத்தில் பஞ்சோன் கூடி
விளம்புகிறேன் குருநோக்க சேயும் நோக்க
ஆற்றலுடன் அளிக்கின்ற பலன்ருன் றன்னை
அறைகின்றேன் யென்சீடா அகத்தி யாரே 90

அகத்தியரே அக்காலம் வடலூர் தன்னில்
அகிலமதில் மாதர்குல சங்க மொன்று
இகத்தினிலே ஈடேற பறையுஞ் சாற்றி
எக்குலமும் நற்குல மென் றுரைத்து
செகத்தினிலே பசிப்பிணியை நீக்கு மென்று
செப்பிட்டு அன்னமொடு நீர்மோர் மாங்காய்
நகத்தினிலே சதையதுவும் ஒட்டி னுப்போல்
நலமாகப் பற்றுண்டாய் தருமம் செய்வார். 91

Koviloor Digital Library

5153
KGS

செய்குவா ரின்னங்கேள் தனபாக் கியத்தோன்
 சேயாகி பஞ்சமத்தில் நின் று நோக்க
அய்யமிலா பலபேரின் பொருளும் சேர்த்து
 அகிலமதில் பூமிபல சேர்க்கை யாகும்
தையலரும் பூமியது சேர்த்து வைக்க
 தரணிதனில் பலபேரும் பொருமை கொண்டு
வையகத்தில் அதுகாலம் கேடு ஒன் று
 வந்திடுமாம் யென்சீடா கேளும் கேளும். 92

கேளுமென் று உரைத்திட்ட யென் குருவே
 கிளிமொழியாள் வள்ளியுட நேசா கேளும்
நாளுமே மாதரால் அன்ன தானம்
நாடுதன்னில் உண்டாகு மென் றுரைத்து
ஆளுமே பலபேரால் பொருளும் சேர்த்து
 அகிலமதில் பூமிபல சேர்க்கை யென்றும்
வேலுமே கொண்டிட்ட வேலா நீர்தான்
 விளம்பியதோர் பலனென்ன யென் குருவே. 93

குருவென் று உரைத்திட்டேன் குமர வேலா
 கும்பமுனி உரைக்கின்றேன் கேளும் கேளும்
தருமமது எவ்விதத்தால் நடக்கு மென் றீர்
 சண்முகமே சுங்கனும் அஷ்ட மத்தில்
பருவமுள்ள சேயவரும் நீச்ச மாகி
 பார்த்திடவே பூமியது எவ்வா றுகும்
சொரூபமுள்ள என்குருவே அதுகா லத்தில்
 சொல்லியதோர் கேடென்ன கூறும் கூறும். 94

கூறுகிறேன் யென்சீடா அகத்தி யாரே
 குவலயத்தில் வள்ளற்கு சுங்க னெட்டில்
பாருமே பளிங்குமதி அஷ்ட மத்தில்
 பரிந்திருக்க அக்காலம் கோச ரத்தில்
சாருமே அந்தணரும் சுங்க னுக்ஷி
 சார்ந்திட்டு ஆரம்பம் ஆக்ஷி யாகி
கோருமே சுங்கனுர் ஆக்ஷி முற்றும்
 குருவப்பா கன்னிதுலாம் விருச்சி கத்தில். 95

கோவிலூர் ஆதீனம் கோவிலூர்-630307

Koviloor Digital Library

விருச்சிகமாம் இன்னங்கேள் மந்த னப்பா
விளம்புகிறேன் பிறரை நாட்டோ ருங்
அருச்சிக்க தேளதனில் வாச மாகும்
அரவான கரும்பாம்பு செட்டி யாகும்
பரிக்ஷிக்க இவ்வாருய் அக்கா லத்தில்
பாரப்பா கிரகங்கள் நிற்ப தாலும்
தரிசிக்சு வந்திட்ட மடவார் மூலம்
தரணிதனில் கோளதுவும் உண்டு உண்டு. 96

உண்டாகும் பலகலகம் மாதர் கட்கு
உரைக்கின்றேன் நூலிழந்த கன்னி யெல்லாம்
கண்டிடலாம் வடலூரில் கன்னிப் பெண்போல்
காணப்பா சோரமது நடக்கு தென்று
அண்டிட்ட மங்கையரை அபகே டாக
அறைந்திட்டு கலகமது உண்டு செய்து
கொண்டிட்ட தருமங்கள் நடக்கா வண்ணம்
குவலயத்தில் பலபேரும் இகழ்வா ராகும். 97

ஆகுமே அக்காலம் அன்ன தானம்
அகத்தியரே வடலூரில் சிறிது குன்றும்
ஏகுமே இவ்வித கொடுமை யாகி
இயம்புகிறேன் வடலூரில் கலக மாகும்
பாகுமொழி வள்ளியுட நேசன் வாக்கு
பரிந்துரைத்தேன் என்சீடா அகத்தி யாரே
காகம்போல் கூட்டமதாய்க் கூடிக் கூடி
கைகொட்டி நகைத்திடுவார் இகழ்ச்சி யாக. 98

ஆகம விதிதப்பா அறைந்த வேலா
அகத்தியரும் அடிபணிந்து ஒன்று கேட்பேன்
நாகம்போல் இவ்விதமாய் வடலூர் தன்னில்
நாடோர்கள் பலதூருய்ப் பழித்தா ராகில்
வேகமுள்ள வள்ளலிட சித்து மென்ன
விளம்பிடுவாய் இக்கலகம் என்ன வாகும்
பாகமுடன் உரைத்திடுவாய் பராபரமே
பரிந்துரையும் இச்சங்கை பரமன் சேயே. 99

Koviloor Digital Library

பரமனுர் நெற்றியில் பரந்து சென்றே
பரிந்துற்ற அருஞ்ஜோதி அறுமுகமாய்
திரமாக வந்துதித்து தினைப் புனத்தில்
தேனுந் தினைமாவுமுண்ட செங்கல்வ ராயன்
பிரமவிதி தப்பாமல் பேசுகின்றேன்
பிரியமுடன் கேட்டிடுவாய் கும்ப நாதா
சரமாக உரைத்திடுவேன் சண் முகமும்
சந்தோஷ மனங்கொண்டு கேளும் கேளும். 100

கேளுமே லக்கினத்தோர் குருவு மாகி
கீர்த்தியுடன் சதுர் கேந்திரம் பெற்று
நாளுமே வள்ளலிட சித்து தன்னுல்
நாடாளும் அரசரால் கலக மப்பா
கோளுமே உள்ளதெல்லாம் மறைய லாகும்
கோபாலன் மருகோனும் கந்தன் வாக்கு
ஆளுமே இவ்வகையில் இடுக்கம் நீங்கி
அகிலமதில் வள்ளற்கு பூமி சேர்க்கை. 101

சேர்க்கையது அடைந்திட்டு அன்ன தானம்
செய்திடுவார் வள்ளலிட அரு ளதனுல்
மார்க்கமுடன் எவ்விடத்தும் மடவா ரெல்லாம்
மனமகிழ்ந்து பயபக்தி விஸ்வாசத் தோடு
நோக்கமுடன் எவ்விதமும் இயற்ற லாகி
நொடிப்பொழுதில் பல்லோர்கள் மகிழ வேண்டி
பார்க்கின்ற மாந்தர்களும் பிரமை கொள்ள
பரிந்துமனம் தருமங்கள் செய்வா ராகும். 102

ஆகம விதிதப்பா உரைத்தேன் சீடா
அகிலமதில் சுங்கனுர் ஆக்ஷி தன்னில்
போகமுடன் வள்ளலிட பூமி தன்னில்
புகழ்பெறவே ஓர்கெங்கை உண்டு செய்து
சோகமிலா யந்திரபால் தோன்ற லாகும்
தோடுடைய செவியோனின் மைந்தன் வாக்கு
மோகமுடன் உரைத்திட்டேன் அகத்தி யாரே
மொழிந்திட்ட இப்பலனும் முற்று மாகும். 103

Koviloor Digital Library

ராகு திசையில் சூரியபுத்தி பலன் மீ 10 நா. 24

முற்றுமாய் ராகுவில் சுங்க ளுகூறி
மொழிந்திட்ட யென்குருவே கேளும் கேளும்
சற்றுமே ராகுவில் கதிரி ளுகூறி
சண்முகமே இவர்காலம் மாதம் பத்து
பற்றுமே நாளதுவும் மூவெட் டாகும்
பாருமே அக்காலம் விகாரி ஆண்டு
பெற்றுமே திங்களது ஆடி ஏழு
பெருமானே அதுகொண்டு கேளும் கேளும். 104
கேளுமே சார்வரி ஆவணித் திங்கள்
கீர்த்தியுடன் திகதியது ஒன்று மட்டும்
நாளுமே அடைந்திட்டு கருநா கத்தில்
நலமான கதிரோனின் அரசு காலம்
ஆளுமே அக்காலம் வள்ள லார்க்கு
அருக்கனுமே அளிக்கின்ற பலனு மென்ன
கோளுமே இல்லாது உரையும் வேலா
கும்பமுனி உரைத்திட்டேன் கதிரோ னப்பா. 105
அப்பாகேள் யென்குருவே அருக்க னும்
ஆருதி யாகிட்டு சப்த மத்தில்
இப்பாரில் சுகசப்தோன் மாலுங் கூடி
இருந்திடவே அதுகாலம் பலனு மென்ன
செப்பிடுவாய் இக்காலம் வள்ள லார்க்கு
செய்கின்ற பலனதுவுங் கூறும் கூறும்
தப்பாது உரைத்திடுவாய் தணிகை வேலா
தவமான யென்குருவே போற்றி போற்றி. 106
போற்றியும் செய்துரைத்த பொதிகை வாசா
புகலுகிறேன் கதிரோனும் ஆரூ ளுகி
நாற்றிசையும் புகழ்படைக்கும் மாலும் கூடி
நலமான மாலோனும் சுகசப்தோ னப்பா
ஆற்றலுடன் கூடிடவே கேளும் கேளும்
அறைகின்றேன் வடலூருக் கதக் கிழ்பா லாகும்
மாற்றமுடன் வடகிழக்கும் உள்ள மாந்தர்
மனிதர்களால் பூமி முதல் க்ஷேத்திரந் தன்னில்107

Koviloor Digital Library

தன்னகரால் வடலூரில் சிறிது பேரும்
தற்செயலாய் அடைந்திட்டு வாது பேசி
அன்னகரில் வழக்கதுவும் செய்வா ரப்பா
அருக்கனூர் ஆக்ஷிமட்டும் வழக்கு மாகும்
பின்னமுடன் அக்காலம் கோசா ரத்தில்
பிலமாகக் கரும்பாம்பு கன்னி வாசம்
கன்னமது செய்தாப்போல் கதிரோ னத்தான்
கைப்பற்றி நின்றிடவே கதிரோ னுக்கு 108
கதிருக்கு ஒளிகுன்றி மறைய லாகும்
கண்டோர்கள் குறைகூற விதியுண் டாகும்
சதிராகப் பல்லோருங் கூடிக் கூடி
சண்டாள அரக்கரைப்போல் பழியும் சாற்றி
எதிராக நிறுத்திடுவார் ஓர் அமங்கலியை
எத்தொழிலும் செய்யாது இருக்க வேண்டி
விதியாக இவராக்ஷில் வழக்கே யாகும்
வேதியரே இதுமுற்றும் கதிர் பலன்றான். 109

ராகு திசையில் சந்திர புத்தி

கதிருக்குப் பலனுரைத்த கார்த்தி கேயா
கலைமதியின் பலனுரைப்பாய் யென் குருவே
மதியவரும் கரும்பாம்பில் ஆக்ஷி காலம்
மாமயிலா உரைக்கின்றேன் மூவார் திங்கள்
அதிபதியாய் வந்திட்டு அரசு புரியும்
அறுமுகமே நாளதுவும் சார்வரி யாம்
விதியாகும் மிதுனத்தில் திகதி யொன்று
விளங்கிட்டு இதுவாக்ஷி முடியுங் காலம் 110
காலத்தை உரைத்திடுவேன் பிலவ ஆண்டு
கனமான தனுர்மாதம் திகதி யொன்று
சாலமுடன் பால்மதியும் அரசு பூண்டு
சாந்தமுடன் பஞ்சமனாய் அஷ்ட மத்தில்
ஆலமுடன் அந்தணரும் சேயும் நோக்க
அறுமுகமே மதியாக்ஷில் பலனு மென்ன
வேலவரே உரைத்திடுவாய் யென் குருவே
வேதியரும் அடி பணிந்து போற்றி போற்றி. 111

Koviloor Digital Library

போற்றியும் செய்துரைத்த பொறிகை வாசா
புகலுகிறேன் கரும்பாம்பின் மதியின் புத்தில்
சாற்றுகிறேன் முற்பகுதி பலனும் தாரார்
சமர்த்தாக வள்ளலும் ஆதி காலம்
மாற்றதுவும் உரைத்திடா வண்ண மாக
மாவிலத்தில் சிருஷ்டித்த பொருளு மப்பா
ஆற்றலுடன் மறைந்திட்டு அப் பொருளும்
அரிவையளால் அறிந்திட்டு ஓர் கலகம் 112

கலகமது உண்டாகி வேந்தர் மூலம்
காசினியில் வழக்கிடவே நேரும் நேரும்
நலமாக இக்காலம் சூரிய னாகில்
நவின்றிட்ட கலகமொடு இதுக ளெல்லாம்
வலமாக தென்மேற்கு மாந்தர் மூலியம்
வடகிழக்காம் ஓர்அடியார் அன்பு கொண்டும்
மலையாக வந்திட்ட இடுக்க மெல்லாம்
மாவிலத்தில் கதிர்கண்ட பனிபோ லோடும். 113

ஓடிடுமாம் முற்பகுதில் இடுக்க மெல்லாம்
ஓதுகிறேன் பிற்பகுதி பலனு மப்பா
ஆடிடவே முன் னுரைத்த பொரு ளதனால்
அறைகின்றேன் சாலையொடு க்ஷேத்திரம் பூமி
நாடுதனில் ஆவிசூழ் குளங் கிணறு
நலமாக இயற்றிடுவார் இன்னங் கேளும்
வாடாமல் வடலூரின் எல்லைக்கே தான்
வழுத்துகிறேன்வடமேற்காம் வைசியர்தன்னால் 114

தன்னாலும் இன்னங்கேள் தென்மேற் காகும்
தையலரால் வள்ளற்குப் பூமி சேர்க்கை
அன்னாளில் உண்டாகும் அதுகா லத்தில்
அந்தணரும் தனுசதனில் ஆக்கி யாகும்
இன்னாளில் மந்தனும் வில் லதனில்
இயம்புகிறேன் அக்காலம் வாச மாகும்
நன்னாளாம் மதியாகில் வேந்தர் மூலம்
நலமாக வள்ளற்குப் பொருளும் சேர்க்கை. 115

Koviloor Digital Library

சேர்க்கையது என்றுரைத்த செங்கல்வ ராயா
செப்புகிறேன் ஓர்சங்கை கேளும் கேளும்
மார்க்கமுடன் அக்காலம் வேந்த னோடு
மந்தனும் அடைந்திடவே கேளும் கேளும்
பார்த்திடவே மந்தனும் லாப விரையோன்
பாரப்பா அக்காலம் வேந்தர் மூலம்
ஆர்க்கமுடன் பொன்பொருளும் எவ்வா றுண்டு
அடிபணிந்து போற்றி போற்றி. 116

போற்றியும் செய்துரைத்த பொதிகை வாசா
புகலுகிறேன் நீருரைத்த சங்கை நன்று
தோற்றியதோர் சனியப்பா அக்கா லத்தில்
சொல்லுகிறேன் சனியவர்க்கு வக்கர முண்டு
ஆற்றலுடன் அடிக்கடி வக்கிர தோஷம்
அஸ்தமனம் அடைந்திடவே பலமே இல்லை
மாற்றமது ஆகாது மலை முனியே
மாருட்டம் வந்திடும் நிவர்த்தி யுண்டு. 117

உண்டாகும் மதிபுத்தி பிற் பகுதில்
ஓர்மாது ஞானகுரு வாகி வருவாள்
கண்டுமே பார்த்திடலாம் அரிவை யர்க்கு
காசினியில் முன்ஜென்ம ஊழ் வினையால்
அண்டமதில் பலபேரும் தூஷிப் பார்கள்
அகிலமதில் இதுவெல்லாம் அரசர் மூலம்
கொண்டதொரு இடுக்கமது நிவர்த்தி யாகும்
குணமாக மதியாக்ஷில் இன்னங் கேளும். 118

கேளுமே அக்காலம் ஞான ஜோதி
கீர்த்தியது விளங்கிடுமாம் வடலூர் தன்னில்
நாளுமே பல்லோர்கள் ஞானம் பூண்டு
நலமாக வடலூரைத் தரிசிப் பார்கள்
ஆளுமே அக்காலம் ஞான பூமி
அரசரிட பார்வையது நேரும் நேரும்
கோளுமே இல்லாது மதி தனக்கு
குமரகுரு உரைத்திட்டேன் பலனும் முற்றே. 119

Koviloor Digital Library

ராகு திசையில் செவ்வாய் புத்தி ளுெ I மீ 0 நாள் 18
முற்றுமாய் ராகுவில் மதியி ளுைகி
மொழிந்திட்ட யென்குருவே கந்தா கேளும்
பற்றுமே ராகுவில் சேயி ளுைகி
பாரப்பா வருடமது ஒன்று மாகும்
சற்றுமே நாளதுவும் பதினெட் டாகும்
சன்முகமே உரைக்கின்றேன் இவ ரரசு
நற்றவமே அடைந்திட்ட யென் குருவே
நவிலுகிறேன் இக்காலம் கேளும் கேளும். 120
கேளுமே ஆண்டதுவும் பிலவ தாகும்
கிர்த்தியுடன் தனுர்மாதம் திகதி யொன்று
நாளுமே அடைந்திட்டு சுபகிருது
நலமாகத் தனுர்திங்கள் திகதி யப்பா
ஆறுமே பத்தொன்பான் திகதி மட்டும்
அரவாகிரியும் சேய்புத்தியும் அறுமுகமே
தானுமே அதுமட்டும் முடிவ தாகும்
தணிகைமலை யென் குருவே சாற்று கின்றேன். 121
சாற்றுகிறேன் தனபாக்கியோன் சேயு மாகி
சண்முகமே பஞ்சமத்தில் சிகியுங் கூடி
வீற்றியே இருந்திட்டார் சனியும் நோக்க
விளம்பிடுவாய் இக்காலம் வள்ள லார்க்கு
ஆற்றலுடன் அங்குஜரும் எப் பலன்ருன்
அளித்திடுவார் இச்சங்கை அறையும் வேலா
தோற்றியே வருகின்ற பலன்கள் தன்னை
தோடுடைய செவியோனின் மைந்தா கூறும். 122
கூறுகிறேன் யென்சீடா அகத்தி யாரே
குஜனப்பா தனபாக்கியோ ளுகி யைந்தில்
பாருமே ஞானத்தின் கார ேேடு
பற்றிருக்க அக்காலம் வடலூர் தன்னில்
நேருமே தென்திசை தெலுங்கர் மூலம்
நெறியாகத் தென்மேற்கும் மேல்பா லாதும்
வாருமே இத்திக்கில் அடியார் மூலம்
வளமாக பூமியது சேர்க்கை யாகும். 123

Koviloor Digital Library

ஆகுமே ஞானங்கள் ஒளிவு தோன்றும்
அகத்தியரே அஞ்ஞானம் போக்கும் சாலை
ஏகுமே எவ்விடமும் ஞானச் சாலை
இயம்புகிறேன் ஞானத்தின் கல்விச் சாலை
தோகைமயில் ஏறுகின்ற கந்த னருளால்
தோன்றிட்டு விளக்கமதாய் ஜொலிக்கு மப்பா
மோகமுடன் மாந்தர்களும் ஞானச் சாலை
மொழிதவரு தடைந்திட்டு ஞானக் கல்வி. 124

கல்விமிக கற்றிடுவார் ஆசா னப்பா
கண்டிடுவாய் பிராஞ்சுநகர் சித்த ராகும்
நல்விதமாய் அவர்தலைமை வகித்துக் கொண்டு
நாடுதனில் வள்ளலின் மகிமை யெல்லாம்
பல்விதமாய் பாஷைதனில் விளக்கிக் கொண்டு
பாரதனில் பறைசாற்றி வருவா ராகும்
சொல்விதமாய் தனங்குவியும் பொருளும் சேரும்
சுத்தமுள்ள ஞானகுரு வள்ள லார்க்கு. 125

வள்ளற்குப் பலனுரைத்த வண்மை என்ன
வழுத்துகிறேன் தனபாக்கியோன் சேயு மாகி
விள்ளுகிறேன் பஞ்சமத்தில் நீச்ச மானோர்
விரையாதி சனிபார்க்க சிகியுங் கூட
அள்ளியே வீசினாய் விசேட மாக
அறுமுகமே நீருரைத்த பலனு மெல்வாறு
கொள்ளுவது இதுசங்கை உரையுங் கந்தா
கோபாலன் மருகோனே உமையாள் சேயே. 126

சேயென்று உரைத்திட்ட பொதிகை வாசா
செப்புகிறேன் தனபாக்கியோன் சேயும் நீச்சம்
தோய்ந்திடவும் அத்தாபோனன் மதியு மாகி
தோன்றியே அசுரகுரு ஆக்ஷி யோடு
பாய்ந்திடவும் குஜனுக்கு நீச்ச தோஷம்
பற்றில்லா அடைந்திட்டு வலுவு மாகும்
வாய்ந்திடவும் வாக்காதி குமர னாகும்
வையகத்தில் குமரகுரு அரு ளதனால். 127

Koviloor Digital Library

அருளதனுல் வள்ளற்கு ஞான முண்டாம்
அஞ்ஞானம் சுட்டறுத்து அவனி யோர்க்கு
மருளதனைப் போக்கிடவே மாயை உலகில்
அவதரித்த வள்ளலாம் அகத்தி யாரே
இருளதனைக் கொண்டிட்ட மனித ரப்பா
ஈடேற வழிதெரியா மயக்க முறவே
பொருளதனை இக்காலம் கொள்வா ரில்லை
பொசிப்புள்ள காலத்தில் வருவோ மென்று. 128

என்றுமே மறைந்திட்டு வள்ள லாரும்
இயற்கைஉரு மறைந்திட்டு ஞான ஒளியாய்
இன்றுமே சுடரொளியில் தோன்ற லாகும்
இயம்புகிறேன் குஜனுரை சனியும் பார்க்க
நன்றுமே பெருநெருப்பை எறும்பு மப்பா
நலமாகக் கிட்டிடவும் வலுவு முண்டோ
அன்றுமே அக்காலம் கோசா ரத்தில்
அந்தணருங் கலசத்தில் வாச மாகும். 129

ஆகுமே இன்னங்கேள் மந்த னப்பா
அறைகின்றேன் மகரத்தில் வாச மாகும்
ஏகுமே மதிதனக்கு மந்தன் நாலு
இயம்புகிறேன் அந்தணரும் ஐந்து மாகும்
போகுமே மந்தனும் லாபத் தானேன்
பொசிப்பாக அக்காலம் ஆசூி யானுர்
மோகமே அடைந்திட்டு அன்னிய நாட்டோர்
மொழிதவருப்பொன்பொருளும்வள்ளலார்க்கு 130

வள்ளற்கு அளித்திட்டு வடலூர் தன்னில்
வழுத்துகிறேன் யந்திரடால் தோன்ற லாகும்
பள்ளியது உண்டாகும் அரச ராலும்
பலகல்வி இயற்றிடுவார் பல்லோர் மெச்ச
கள்ளமனம் இல்லாது காசினி யோர்
கதிர்கண்ட பனிபோலும் மாயை நீக்கி
துள்ளியே ஜோதியுரு காண வேண்டி
துலகோர்கள் வந்திடுவார் கும்பா கேளும். 131

Koviloor Digital Library

கேளுமே வள்ளலார் வாக்கு மப்பா
ஓர்த்தியுடன் பிரகாசம் தோன்றும் தோன்றும்
நாளுமே வடலூரும் விரிவாய்த் தோன்றும்
நாடாளு மரசரும் வடலூர் தன்னில்
ஆளுமே ஆக்ஷியது செய்ய வேண்டி
ஆழ்ந்துமே யோஜித்து முடிவு கொள்வார்
கோளுமே இல்லாது ஞான பூமி [றும். 132
கொண்டிடுமாம் பிரகாசம் தோன்றும் தோன்
தோன்றிடுமாம் உலகெலாம் வள்ளல் சங்கை
தோகைமயில் ஏறுகின்ற குமர னருளால்
ஊன்றிடுமாம் ஞானக்கோல் உல கதனில்
உண்மையுடன் ஞானகுரு தோற்ற மாகி
ஆன்றோர்க்கும் அடியார்க்கும் அமு தளித்து
அவனியிலே மறைந்திடுமாம் அகத்தி யாரே
சான்றிட்ட இப்பலன்றான் கருநா கத்தில்
சாற்றியதோர் குஜனுக்ஷி பலனு முற்றே. 133

குரு மகாதிசை வரு 16க்கு பொதுப்பலன்

முற்றுமாய் ராகாக்ஷி உரைத்த நாதா
மொழிந்திடுவாய் குருவாக்ஷி பலனு மப்பா
பற்றுமே அடைந்திட்டு உரைத்தேன் வேலா
பார்வதியா ளீன்றிட்ட பரா பரமே
சற்றுமே குருவாக்ஷி ஆண்டு கேளும்
சண்முகமே மார்க்கண்டன் வயது மாகும்
பெற்றுமே யடைந்திட்டு யென் குருவே
பிரியமுடன் அரசாளும் காலம் கேளும். 134
கேளுமே சுபகிருது தனுர்மா தத்தில்
கீர்த்தியுடன் பத்தொன்பான் திகதி கொண்டு
ஆளுமே ஆண்டதுவுங் காள யுக்தில்
அறுமுகமே தனுர்திங்கள் மூவா றுன்று
நாளுமே யடைந்திட்டு அரச னப்பா
நலமாக லக்கினத் தசம னுகி
கோளுமே இல்லாது கேந்திரம் பற்ற
குணமாக உரைத்திடுவாய் பலனு யென்ன 135

Koviloor Digital Library

என்னதான் என்றுரைத்த எந்தன் சீடா
இயம்புகிறேன் குருவாசுலில் வடலூ ரப்பா
அன்னமயம் விளங்கிடுமாம் பிரகா சித்து
அறைகின்றேன் சித்திக மாகும் ஆகும்
சொன்னசொல் தவறாத அடியா ரப்பா
ஜோதியுரு கொண்டிட்டுத் தோன்ற லாகும்
கன்னல்மொழி வடலூரும் காசி னியில்
காணப்பா பிரகாசம் தோன்றும் தோன்றும். 136

தோன்றிட்டு அரசருமே வடலூர் தன்னில்
துலகோர்கள் மெச்சிடவே மாளி கட்டி
ஊன்றிடுவார் செங்கோலும் அரசு பூண்பார்
உலகோர்கள் புகழ்ந்திடவே அரசர் வாசம்
ஆன்றோர்கள் பலபேரும் குவிய லாகி
அரசரிடம் நேசித்து தொழிற் சாலைதான்
சான்றோர்கள் அமைத்திடுவார் தவ முனியே [137
சண்முகமும் உரைக்கின்றேன் இன்னங் கேளும்.

கேளுமே வடலூரும் நகர மாகும்
கீர்த்தியுடன் பலபலவாய் மாளி கட்டி
நாளுமே தில்லைநகர் போலு மாகும்
நலமாக யந்திரங்கள் பலவுண் டாகும்
கோளுமே இல்லாது தொழிலும் விர்த்தி
குவலயத்தில் ஏற்றுமதி துறைபோ லாகும்
ஆளுமே சாலைமிக அழகு முண்டு
அயல்நாட்டார் வாசமதாய் வருவா ரப்பா. 138

அப்பாகேள் வள்ளலிட கீர்த்தி யோங்கி
அயல்நாட்டோர் புகழ்ந்திட்டு வள்ள லார்க்கு
இப்பாரில் நிதிதிரட்டி பூமி சேர்க்கை
நெறியாகத் தந்திடுவார் தவ முனியே
செப்புகிறேன் யெத்தொழிலும் சித்தி யாகி
செயமாக வந்திடுமாம் வடலூ ரப்பா
ஒப்பிடவே மறுசங்கை பூர்ண மதியில்
ஓதுகிறேன் அறிந்திடுவாய் யெந்தன் சீடா. 139

Koviloor Digital Library

சீடாகேள் என்றுரைத்த செங்கல்வ ராயா
திருத்தணிகை வாழ்நின்ற வேலா போற்றி
வாடாமல் வையகத்தோர் உய்யும் வண்ணம்
வந்துதித்து ஜோதியுரு கொண்ட பாலா
ஆடியபாதம் அம்பலவாணன் அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அறுமுகஜோதிஅறுமுகமே
நாடியே இந்நூலை பூர்ண மதியில்
நவின்றிட்டேன் யென்குருவே சாற்று வாயே. 140

சாற்றுவா யென்றுரைத்த கும்பா கேளும்
சாந்தமுடன் உரைக்கின்றோம் யெந்தன் சீடா
நாற்றிசையும் புகழ்படைக்கும் இந்நூ லப்பா
நவின்றிட்டோம் அடியார்க்கும் அன்பர் கட்கும்
போற்றியே இந்நூலைச் சரணம் செய்து
புகன்றிடுவாய் கார்த்திகையில் புகலுகிறேன்
வேற்றுமனம் அடையாது கும்பா கேளும்
வேதியரே பூஜித்து சாற்று வாயே. 141

சாற்றுவா யென்றுரைத்த சண் முகமே
சாந்தமுடன் பயபக்தி கொண்டு மேதான்
போற்றியே செய்திட்டுக் கும்ப நாதன்
புள்ளிமயில் மீதேறும் வள்ளி மணாளா
கூற்றுவனுக் கிடங்கொடா குமர வேலா
குவலயத்தில் பூஜித்து இந்நூ லதனை
கார்த்திகைத் திருநாள் அன்று
கலைமுனி பணிந்து கேட்டேன். 142

பணிந்துமே கேட்டுக் கொண்ட
பாலனே யெந்தன் சீடா
தணிந்துமே கூறுகின்றோம் தரணி தனில்
சாந்தமுடன் அடியார்க்கு குருவி னுகில்
துணிந்துமே அயல்நாட்டோர் தெலுங்க ரோடும்
துலகாளும் அரசர்பால் வடலூர் தன்னில்
கணிந்துமே கைத்தொழிலும் ரசா யனந்தான்
காணப்பா பலவித தொழிலுண் டாகும். 143

Koviloor Digital Library

உண்டாகும் உலகாளும் மன்னர் தன்னால்
ஓதுகிறேன் தொழில்விருத்தி மிகவுண் டாகி
கண்டுமே காசிவிரியோர் புகழும் வண்ணம்
காணப்பா பல்லோர்கள் தொழில் புரிவார்
வண்டுபோல் மொய்த்திடுவார் அயல்நாட் டோரும்
வள்ளலிட மகிமைதனைக் காண வேண்டி
அண்டியே வந்திட்டு வடலூர் தன்னில் [144
அருட்பெருஞ்ஜோதி தரிசனம் அடைவா ரப்பா.

அடைகுவா ரென்றுரைத்த அறு முகமே
அறைகின்றேன் ஓர்சங்கை கேளும் கேளும்
கொடைமன்னன் ஆவியது முற்கா லந்தான்
குவலயத்தில் சென் றிட்டு பிற்கா லத்தில்
விடைதனில் சனிவா சந்தான் விளங்கிடும்
விளம்புகிறேன் பிற்பாகம் ஆரம் பத்தில்
தடையிலா அக்காலம் தரணி தன்னில்
தவமான அடியார்க்கு அட்ட மத்தன். 145

அட்டமத்தில் சனிநிற்க அடியா ருக்கு
அக்காலம் பலனதுவும் ஏது செய்வார்
கட்டமது உண்டாமோ காசி னியில்
காணப்பா இச்சங்கை கூறும் கூறும்
சட்டமுடன் உரைத்திடுவாய் சண் முகமே
சாந்தமுள்ள யென்குருவே உமையாள் சேயே
திட்டமுடன் உரைத்திடுவாய் வள்ளி நேசா
திருத்தணிகைவேலோனே போற்றிபோற்றி. 146

போற்றியும் செய்துரைத்த பொதிகை வாசா
புகலுகிறேன் விடைதனில் சனிவா சந்தான்
சாற்றுகிறேன் அக்காலம் வடலூர் தன்னில்
சார்ந்திடுமாம் ஓர்கலகம் உண்டு உண்டு
வீற்றியே வந்திட்ட அன்னிய நாட்டார்
விளம்புகிறேன் அன்னோரால் மேல்பால் திக்கில்
தோற்றியே சிறிதுபேர் அன்னோ ராலும்
தொழில்வர்க்கம் தன்னாலும் கலகமுண்டு. 147

Koviloor Digital Library

கலகமது உண்டாகி தொழிலு மப்பா
காசினியில் தடையுண்டாய் தன விரையம்
பலமாக அடைந்திட்டு வடலூரர் தன்னை
பழித்திடவும் நேரிடுமாம் யெந்தன் சீடா
வளமாகப் பொன்பொருளும் விரய முண்டாய்
வள்ளலிட பூமிதன்னில் வழக்கும் செய்வார்
நலமாக அட்டமத்தில் சனிதான் வாசம்
நலமில்லை யென் சீடா கும்ப நாதா 148

கும்பனே யென்றுரைத்த குமர வேலா
குவலயத்தில் அட்டமத்தோன் சனியின் காலம்
அம்புவியில் தொழில்வர்க்கம் அதனு லப்பா
அன்னியரால் அந்தகரின் திக்கோர் தன்னால்
வம்புமிக வந்திடு மென் றுரைத்தீர்
வழுத்துகிறேன் ஓர்சங்கை கேளும் கேளும்
நம்பியே பணிந்திடும் வள்ள லாரின்
நலமான பூமிதனில் வழக்கு மென்ன. 149

என்னதா னென்றுரைத்த யெந்தன் சீடா
இயம்புகிறேன் வள்ளலார் பூமி தன்னை
அன்னிய நாட்டானும் அக்கா லத்தில்
அடைந்திட்டு அறமியற்றி அன்ன தானம்
சொன்னசொல் தவறாது செயவா னப்பா
சொல்லுகிறேன் மேற்றிக்கோர் பொறுமை
கன்னமது செய்தாப்போல் காசி னியில் [கொண்டு
காசினியில் வழக்கதுவும் செய்வா ரப்பா. 150

அப்பாகேள் யென்சீடா அகத்தி யாரே
அறைகின்றேன் இடுக்கமது அரசர் தன்னால்
இப்பாரில் இடுக்கமது நில்லா தோடும்
இயம்புகிறேன் தொழில்விருத்திப் பலித மாகும்
செப்புகிறேன் தருமங்கள் நடக்க லாகும்
செகமதனில் சித்திக மாகும் ஆகும்
தப்பிதமே இல்லாமல் கூறு கின்றேன்
தவமுனியே இன்னங்கேள் வள்ள லார்க்கு

Koviloor Digital Library

KOVILO

வள்ளற்கு வையகத்தில் புகழுண் டாகி
வாழ்த்துகிறேன் சித்தநிகம் உண்டு உண்டு
தள்ளியே அஞ்ஞானம் விட்டு மாந்தர்
தரணிதனில் மெய்ஞ்ஞானம் அடையலுற்று
கள்ளமன மில்லாது காசி னியில்
காணப்பா தீண்டாமை ஒழிய லாகி
வெள்ளியது போல் பிர காசித்து
வேறியரே சமரச சன்மார்க் கந்தான். 152
சன்மார்க்கம் அடைந்திட்டு சத்திய சீலர்
சர்ச்சரையாய்ப் பெரியோரின் நேசங் கொண்டு
துன்மார்க்கம் அடையாது வள்ளல் பாதம்
துணைகொண்டு பணிந்திட்டு தொழுது போற்றி
கன்மார்க்கம் அடைந்திட்டு காசி னியில்
கைகண்ட பலனதுவாய் காண்பா ரப்பா
பன்மார்க்கம் மிகவுண்டு பள்ளி தன்னில்
பாலகனே யென்சீடா கேளும் கேளும். 153
கேளுமே என்சீடா கும்ப நாதா
கீர்த்தியது உண்டாகி சித்து மாகும்
நாளுமே செந்திருவாள் நடன மாவாள்
நலமான வடலூரை தேவ ரப்பா
கோளுமே இல்லாது தினந் தினமும்
கோபாலன் அயன்அரனும் தொழுது போற்றி
ஆளுமே வள்ளலை மகிழ்ந்து கண்டு
அடைந்திடுவார் தேவரொடு மூவ ரப்பா. 154
அப்பாகேள் இதுமட்டும் அரச னுகில்
அறைந்திட்டேன் சிறிதுபலன் சுருக்க மாக
இப்பாரில் அடைகின்ற மற்ற சங்கை
இயம்புகிறோம் நவக்கோளின் புத்தி தன்னில்
செப்புகிறோம் அக்காலம் நடப்ப தெல்லாம்
ஜெயமாக இதுமட்டும் அரச னுகில்
ஒப்பிடவே உரைத்திட்ட பல னதுவும்
ஓதுகிறேன் இதுமட்டும் முற்று மாகும். 155

Koviloor Digital Library

Koviloor Digital Library

அருள்ஜோதி ஆசிரம வெளியீடு.

---

1. வடலூர் இராமலிங்கசுவாமிகள் ரூ. 5
(விரிவான சரிதம்)
2. சுவாமிகளும், சித்தர்களும் அ. 8
3. நாவலரும்; சுவாமிகளும் 8
4. ஜோதி இராமலிங்கரும்,
கும்பாபிஷேகவரலாறும் (தைபூசமலர்) 8
5. வடலூர் இராமலிங்கம் வருவாரா? 8
6. வள்ளலார் மறைவும் வரவும் 5
7. சுவாமிகள் ஜாதகம் குமரகுருபரநாடி 4
8. காக்கையர் நூல் 4
9. சிதம்பர க்ஷேத்திர மகிமை 6
10. பழநி க்ஷேத்திர மகிமை 12
11. அதிர்ஷ்டம் நல்லகாலம்
ஆரோக்யம் 2

ரூ. 7—8—0 அனுப்புவோருக்கு 11 புஸ்தகமும் அனுப்பப்படும். இன்றே எழுதவும்.

விலாசம்:—

ஆசிரியர் சி. பி. மாசிலாமணி பி ஏ.

— அருள்ஜோதி ஆசிரமம், —

3, பாவாமுதலி தெரு, சிதம்பரம்.